
# ஆயிரம் ஆண்டுகால மனிதர்கள்



920
சடகோ
SLIPR

இரா. சடகோபன்

# ஆயிரம் ஆண்டுகால மனிதர்கள்

இரா.சடகோபன் B.A. (புவியியல் சிறப்பு)

தேசிய கலை இலக்கியப் பேரவை

**தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு . 97**

| | | |
|---|---|---|
| **நூற்பெயர்** | : | ஆயிரம் ஆண்டு கால மனிதர்கள் |
| **ஆசிரியர்** | : | இரா. சடகோபன் |
| **பதிப்பு** | : | ஒக்டோபர், 2002 |
| **வெளியீடு** | : | தேசிய கலை இலக்கியப் பேரவை |
| **அச்சிட்டோர்** | : | கௌரி அச்சகம் |
| **முகப்பு ஓவியம்** | : | இரா. சடகோபன் |
| **விநியோகம்** | : | சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் (பிறைவேற்) லிமிடட்,<br>44, மூன்றாம் மாடி,<br>கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி,<br>கொழும்பு -11.<br>தொலைபேசி : 335844.<br><br>வசந்தம் புத்தக நிலையம்<br>405, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். |

**விலை:** ரூபா. 100/=

| | | |
|---|---|---|
| Title | : | Aayiram Aandu Kaala Manitharkal |
| Author | : | R. Shadagophan |
| Edition | : | October, 2002 |
| Publishers | : | Dheshiya Kalai Ilakkiyap Peravai |
| Printers | : | Gowry Printers |
| Cover Design | : | R. Shadagopan |
| Diustributors | : | **South Asian Books,**<br>Vasantham (Pvt) Ltd,<br>No. 44, 3rd Floor,<br>C.C.S.M. Complex,<br>Colombo -11.<br>Tel : 335844.<br><br>**Vasantham Book House,**<br>405, Stanly Road,<br>Jaffna. |
| ISBN No | : | 955-8567-02-7 |

Price: Rs. 100/=

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை ...................................... | 4 |
| நூல் பற்றி ...................................... | 6 |
| அணிந்துரை ...................................... | 10 |
| (1) கிறிஸ்தோபர் கொலம்பஸ் ...................................... | 12 |
| (2) வில்லியம் ஷேக்ஸ்பியர் ...................................... | 16 |
| (3) ஆபிரஹாம் லிங்கன் ...................................... | 21 |
| (4) சார்ள்ஸ் டார்வின் ...................................... | 26 |
| (5) கார்ல் மார்க்ஸ் ...................................... | 30 |
| (6) அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் ...................................... | 35 |
| (7) மகாத்மா காந்தி ...................................... | 39 |
| (8) அல்பர்ட் ஐன்ஸ்டின் ...................................... | 43 |
| (9) அடோல்ப் ஹிட்லர் ...................................... | 48 |
| (10) நீல் ஆம்ஸ்ட்ரோங் ...................................... | 53 |

# பதிப்புரை

தமிழிலே பிள்ளைகளுக்கான இலக்கியம் என்பது ஆரம்ப நிலையிலேயே உள்ளதெனலாம்.

மழலைகள், குழந்தைகள், பிள்ளைகள், பருவமானவர்கள் எனப் பிள்ளைப் பருவத்தின் பல்வேறு நிலைகளை நாம் இனங்கண்டு அவ்வப் பருவத்தினருக்கான கலை-இலக்கிய சஞ்சிகைகள், நூல்கள், நடன-நாடக நிகழ்வுகள் என்பவற்றை தமிழ்ப் பற்றாளர்கள் மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இப் பருவத்தினரைச் சிறுவர்கள் எனக் கொச்சைப்படுத்தி அவர்களுக்கான ஆளுமைப் பண்பை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக வீடுகளிலே வளர்ந்தவர்களின் வேலைகளுக்கான ஏவலர்களாகப் பார்க்கும் கண்ணோட்டத்தை மாற்ற வேண்டுமென்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறுவர் என்பதற்குப் பதிலாக பிள்ளை என்ற பதப்பிரயோகம் வயதுத்துவ மேலாண்மையை தவிர்க்க உதவலாம். பிள்ளைகளுக்கான இலக்கிய வெளியீடுகளைத் தரும் முயற்சிகளிலே தேசிய கலை இலக்கியப் பேரவையினராகிய நாம் கூடப் பின் தங்கிய நிலையிலேயே உள்ளோம்.

கல்வயல் குமாரசாமியின் 'பாப்பா பாடல்கள்', மாவை நித்தியானந்தனின் 'சின்னச் சின்னக் கதைகள்', சி.சிவசேகரம்-பிரேமிளாவின் 'பாட்டும் கூத்தும்' ஆகிய மூன்று நூல்களையே இதுவரை வெளியிட்டுள்ளோம். எமது 97வது நூலாகவும் பிள்ளை இலக்கியத்தில் 4வது நூலாகவும் 'ஆயிரம் ஆண்டுகால மனிதர்கள்' என்ற இரா.சடகோபன் அவர்களின் இந்நூலை வெளிக்கொணர்வதில் மகிழ்வடைகின்றோம். பிள்ளைகளுக்கான புனைகதை சாராத படைப்பிலக்கியமாக வெளிவரும் இந்நூல் பிள்ளைகளின் தேடல் உலகுக்கு உற்சாகம் ஊட்டுமென நாம் நம்பலாம்.

கணனி வடிவமைத்த சோபனா, சிந்தியா ஆகியோருக்கும், இந்நூலை அச்சிட்டு வழங்கிய கௌரி அச்சகத்தினருக்கும், திரு. எஸ். இராஜரட்ணம் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

நூல் விமர்சனங்களை வரவேற்கிறோம்.

தேசியகலை இலக்கியப் பேரவை
இல. 44, 3-ம் மாடி,
கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி : 335844.

# நூல் பற்றி

பத்துலட்சம் ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என்று கருதப்படும் இப்பூமியில் சுமார் அறுநூறு கோடி மக்கள் வாழ்கிறார்கள். மேலும் பலநூறு கோடி மக்கள் பிறந்து, வாழ்ந்து, மடிந்து போயிருக்கிறார்கள். இவர்களில் எத்தனை பேரை உலக மக்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள்?

உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற மறக்க முடியாத முக்கியமான நிகழ்ச்சி ஒன்றை கூறுங்கள் என்று யாரும் உங்களைக் கேட்டால் சட்டென்று ஞாபகத்துக்கு வரும் நிகழ்ச்சி எதுவாக இருக்கும்? கட்டாயம் அந்நிகழ்ச்சி உங்கள் வாழ்வில் பாரதூரமான மாற்றத்தை ஏற்படுத்தியதாக இருக்கும்.

அப்படித்தான் உலக மானிட வரலாற்றிலும் மறக்க முடியாத பிரசித்தி பெற்ற மனிதர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களது சிந்தனைகள், செயல்கள், கூரிய கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள், செய்த சாதனைகள் ஆகியன அவர்களை வானளவுக்கு உயர்ந்த மனிதர்களாக ஆக்கியுள்ளன.

அவர்களைத்தான் மாமனிதர்கள் என்றும் மனிதருள் மாணிக்கம் என்றும் நாம் அழைக்கின்றோம்.

இந்த மனிதர்கள் தமக்காக அன்றி இவ்வுலக மக்கள் அனைவருக்காகவும் வாழ்ந்தவர்கள். இவ்வுலகின் அற்புதங்களை கண்டுபிடித்து ஏனைய மக்களின் மேன்மைக்காக தம் வாழ்வின் சந்தோஷங்களை அர்ப்பணித்தவர்கள். இன்றைய நவீன உலகின் சகல வசதி வாய்ப்புகளையும், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களையும், அரசியல் சிந்தனைகளையும், உன்னதத் தத்துவங்களையும், அரிய இலக்கியப் படைப்புக்களையும் எமக்குத் தந்தவர்கள். இவர்கள் இவ்வுலகில் அவதரிக்காதிருந்திருந்தால் இந்த உலகம் சிலவேளை இவ்வளவு அழகியதாக இருந்திருக்காது.

அதி மானிடர்களில் ஆயிரக்கணக்கானவர்களை பட்டியலிட முடியும். என்றபோதும் அவர்கள் மனித சமூகத்தின் மீது ஏற்படுத்திய பாரிய விளைவுகளின் அடிப்படையில் இந்நூலில் அத்தகையவர்களில் பத்துப்பேரை மாத்திரம் உங்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளேன். அவர்கள் அனைவரும் ஆயிரமாம் ஆண்டு தொடக்கம் இரண்டாயிரமாம் ஆண்டு வரை (கி.பி.1000-கி.பி.2000)யுள்ள ஆயிரம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த ஆயிரம் ஆண்டு கால மனிதர்கள். அவர்கள் கிறிஸ்தோபர் கொலம்பஸ் (கி.பி.1451-1506), வில்லியம் ஷேக்ஸ்பியர் (கி.பி.1564-1616), ஆபிரகாம் லிங்கன் (கி.பி.1809-1865), சார்ள்ஸ் டார்வின் (கி.பி.1809-1882), கார்ல் மார்க்ஸ் (கி.பி.1818-1883), அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் (கி.பி.1847-1922), மகாத்மா காந்தி (கி.பி.1869-1948), அல்பர்ட் ஐன்ஸ்டின் (கி.பி.1879-1955), அடோல்ப் ஹிட்லர் (கி.பி.1889-1945), நீல் ஆம்ஸ்ட் ரோங் (கி.பி.1930-இன்றும் வாழ்பவர்) ஆகியவர்கள். இவர்களை அவர்கள் வாழ்ந்திருந்த காலப்பகுதியின் அடிப்படையில் வரிசைப்படுத்தியிருக்கிறேன். எனினும் இவர்கள் அனைவரும் மனித சமூகத்தின் மீது சிறப்பான அல்லது உன்னதமான விளைவுகளை மாத்திரமே ஏற்படுத்தியவர்கள் அல்ல. ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த அடோல்ப் ஹிட்லர் உலகம் இதுவரை கண்டிராத மாபெரும் சர்வாதிகாரியாகவும், மனித சமூகத்தின் மீது மிகப் பெரிய கொடுமைகள் புரிந்தவனாகவும் உள்ளான். சுமார் 150 இலட்சம் மனிதர்களின் கொடூர மரணத்துக்கும் காரணமாக இருந்தான். தனது கொடூரச் செயலாலேயே உலக வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்ட ஹிட்லர், இப்படிப்பட்ட தலைவர்கள் இனியும் உலக வரலாற்றில் தோன்றக் கூடாது என்பதற்கு உதாரணமாகவே இந்நூலில் இடம்பிடித்திருக்கிறான். அதேபோல் அதே ஜெர்மனியில் பிறந்தவரான அல்பர்ட் ஐன்ஸ்டின் ஆக்கித் தந்த நவீன பௌதிகக் கோட்பாடுகளில் இருந்துதான் இன்றைய பௌதிக விஞ்ஞான வளர்ச்சி கட்டி எழுப்பப்பட்டது. எனினும் அவரால் கண்டுபிடிக்கப்பட்ட அணுக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அணுகுண்டு ஜப்பானில் ஹீரோஷிமாவில் போடப்பட்ட போது அது உலகின் மற்றுமொரு பேரழிவுக்கு காரணமாகியது. தன்னால் உருவாக்கப்பட்ட அணுக் கோட்பாட்டால் இத்தகைய அழிவு ஏற்படக்கூடும் என்று அறிந்திருந்தால் ஐன்ஸ்டின் அணுக் கோட்பாட்டை உருவாக்காமல் இருந்திருக்கக் கூடும்.

நமக்கு முன்னர் எத்தனையோ யுகங்களும், சகாப்தங்களும், ஆயிரம் ஆண்டு காலங்களும், நூற்றாண்டுகளும் நடந்து முடிந்திருக்கின்ற போதும் நாம் இரண்டாவது ஆயிரமாண்டு காலத்தின் முடிவைத் தரிசித்த பாக்கியத்தினை பெற்றவர்களாக இருக்கின்றோம். இரண்டாவது ஆயிரம் ஆண்டு கால முடிவின் போதுதான் அக்காலப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகள், வாழ்ந்திருந்த மனிதர்கள், நாம் அடைந்த முன்னேற்றம் என்பன பற்றி திரும்பிப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது உலகின் மிகப்பெரும் செய்தி நிறுவனமான ‘ரொய்டர்’ நிறுவனம் நடந்து முடிந்த ஆயிரமாண்டு காலப்பகுதியில் வாழ்ந்திருந்து, மனித சமூகத்தின் மீது பாரிய விளைவுகளையும், தாக்கத்தையும் ஏற்படுத்திய அதி மானிடர்களை அவர்கள் புரிந்த செயல்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தியிருந்தது.

அந்த வரிசையை ஆதாரமாகக் கொண்டே இந்நூலில் இடம்பெறும் சாதனையாளர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளேன். எனினும் வசதி கருதி அவர்கள் செய்த சாதனைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் அவர்கள் வாழ்ந்திருந்த காலப்பகுதியை வைத்து வரிசைப்படுத்தியுள்ளேன். ரொய்டர் நிறுவனம் முதலாவது அதி மானிடனாக அல்பர்ட் ஜன்ஸ்டினையும், இரண்டாவதாக மகாத்மா காந்தியையும் வரிசைப்படுத்தியிருந்தது.

நாம் சாதனைகள் படைக்க வேண்டுமாயின் ஏற்கனவே படைக்கப்பட்ட சாதனைகளையும், அருஞ் செயல்களையும், அவற்றை செய்தவர்களையும் தெரிந்திருக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றியும், எத்தகைய பிரச்சனைகளை அவர்கள் எதிர் கொண்டார்கள் என்பதனையும் தெரிந்து வைத்திருப்பது நமக்கு உத்வேகத்தை அளிப்பதாக இருக்கும். நமக்கேற்படும் பிரச்சனைகளுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பதற்கான பாடங்களையும் அவை கற்றுத்தரும். இவற்றைப் புரிந்து கொண்டு எதிர்காலத்தில் நீங்களும் சாதனையாளர்களாக வரவேண்டும் (ஹிட்லர் போல் அல்ல) என்பதே இந்நூல் உங்களுக்கு வழங்கும் செய்தி.

பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட பள்ளிப் பருவ மாணவர்களை மனதிற் கொண்டு இலகு நடையில் வார்த்தைகளின் அடர்த்தியைக் கூடுமானவரை குறைத்து இந்நூல் எழுதப்பட்டிருந்தாலும் சகலரும் வாசிக்கக் கூடிய ஒரு நூலாக இந்நூல் அமைகிறது.

வாசிப்போரது ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் படங்களையும் வரைந்து வழங்கியிருக்கிறேன்.

இந்நூலை எழுத மூலத்தகவல்கள் தந்துதவிய நண்பர் டெமாட்ரியஸ் ஏ.பெரேரா, அணிந்துரை வழங்கிய பேராசிரியர் சோ.சந்திரசேகரன், பதிப்பித்து வெளியிட முன்வந்த தேசிய கலை இலக்கியப் பேரவை, ஆலோசனை வழங்கி ஊக்குவித்த நண்பர் சட்டத்தரணி சோ.தேவராஜா, நூலின் மொழி நடையை இலகுவாக்கவும், கையெழுத்துப் பிரதியைத் தயாரிக்கவும் உதவிய என் வாழ்க்கைத் துணைவி எஸ்.கிரேஸ், அன்புச் செல்வங்கள் ஷர்மினி, தன்ரக்ஷன் ஆகியோருக்கு என் அன்பும், நன்றிகளும் உரித்தாகட்டும்.

**இரா.சடகோபன்.**

*17B,* ரிச்சர்ட் டி சொய்சா
**ஊடகவியலாளர் வீடமைப்புத் திட்டம்**
**பத்தரமுல்ல.**
**14.09.2002.**

## அணிந்துரை

'ஆயிரம் ஆண்டுகால மனிதர்கள்' என்ற தலைப்பில் கடந்த காலங்களில் வாழ்ந்த, பாடசாலைப் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டிய பத்துப் பேர் பற்றிய இச் சிறுநூலை திரு.இரா.சடகோபன் எழுதியுள்ளார். இன்றைய பிள்ளைகளின் கல்வியானது பெரும்பாலும் பரீட்சைகளை மையமாகக் கொண்டதென்றும் பாடத்திட்டம், பாட நூல்களுக்கு அப்பால் உலக அறிவை வளர்த்துக் கொள்ள உதவும் நூல்களை அவர்கள் படிப்பதற்கான ஊக்குவிப்பைக் கல்வி முறை வழங்குவதில்லை என்றும் பல குறைபாடுகள் எடுத்துக் கூறப்படுகின்றன. பொது வாசிப்பில் ஈடுபட மறுக்கும் பண்பு தொடர்ந்து உயர் கல்வி நிலை வரை இட்டுச் செல்லப்பட்டு, அந்நிலையில் விரிவுரைக் குறிப்புகளை மட்டுமே பயிலும் எண்ணங்களை வளர்த்து விடுவதால் உயர் கல்வித் தராதரங்களையும் வீழ்ச்சியடையச் செய்து வருகின்றன என்று உயர்கல்வி பற்றிய விமரிசனங்கள் கூறுகின்றன. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல இன்று பல்வேறு வயது நிலைகளில் உள்ள பிள்ளைகள் படிப்பதற்கு ஏற்ற மொழி நடையில் எழுதப்படும் நூல்களும் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன. இந்நிலைமைகளைக் கருத்திற் கொள்ளும் போது, இரா.சடகோபன் அவர்களின் இச்சிறுவர் நூலின் முக்கியத்துவம் நன்கு புலப்படுகின்றது.

பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி தொடர்பான மற்றொரு விடயத்தையும் இவ்விடத்து குறிப்பிட வேண்டும். பாடசாலைக் கல்விக்கு ஒரு கால வரம்பு உண்டு. சர்வதேச ஆய்வுகளின்படி பாடசாலை மாணவர்கள் உலகளாவிய ரீதியில் 95 சதவீதமான தமது நேரத்தைப் பாடசாலைக்கு வெளியேதான் கழிக்கின்றார்கள். ஒரு நாளில் 24 மணி நேரமும் பாடசாலைகள் இயங்குவதில்லை.

இந்த எல்லைக்குட்பட்ட நேரத்தில், பரந்த சமூக விஞ்ஞான மற்றும் மனிதப் பண்பியல் துறைகளைச் சார்ந்த விரிந்த அறிவுத் தொகுதியில் நிபுணர்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிறு அறிவுத் தொகுதியே பாடசாலைப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றது. சுருங்கக் கூறின் பாடசாலைக் காலத்தில் கைம்மண் அளவே கற்கப்படுகின்றது. அறிவு வெள்ளம் பிரவாகம் எடுத்தோடும் இந்நாளில் மாணவர்கள் சுயமாக, தாமாக முயன்று பாடத்திட்டத்துக்குள் அடங்காத அறிவுத் தொகுதியிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு கல்வியாளரிடம் உண்டு. இந் நோக்கினை நிறைவு செய்வதற்குப் போதிய துணை நூல்கள் மாணவரின் மொழி ஆற்றல் வளர்ச்சியைக் கருத்திற் கொண்ட முறையில் வெளிவர வேண்டியுள்ளது. இப்பின்புலத்தில் சடகோபன் அவர்களின் இம்முயற்சி முக்கியத்துவம் பெறுகின்றது.

சட்டத்தரணியாகவும் பத்திரிகையாளராகவும் கவிஞராகவும் சிறந்த ஓவியராகவும் இன்று மிளிர்ந்துள்ள சடகோபன் அவர்கள் கடந்த ஆயிரமாண்டு கால உலக வரலாற்றில் ஒவ்வொரு கால கட்டத்திலும் மனித நாகரிக வரலாறு, அரசியல் வரலாறு என்பவற்றில் திருப்பு முனையாக அமைந்து தடம் பதித்த வரலாற்று நாயகர்கள் பத்துப் பேரை இந்நூலில் இளந்தலைமுறையினருக்கு அறிமுகம் செய்கின்றார். அவர்கள் அனைவருமே மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியவர்கள். அவர்களுடைய வாழ்க்கைப் பின்னணி, பின்பற்றிய கொள்கைகள், ஆற்றிய பங்களிப்பு என்பன பற்றி அனுபவம் மிக்க எழுத்தாளரான சடகோபன் எளிதில் விளங்கும் மொழிநடையில் சிறப்பாக ஒவ்வொரு கட்டுரையையும் எழுதியுள்ளார். நூலின் மற்றொரு சிறப்பு, அட்டைப்படம் உட்படத் தேவையான படங்களை நூலாசிரியரே வரைந்துள்ளமைதான்.

பல்வேறு சிறப்புகளையும் கொண்டமைந்துள்ள இந்நூல் தமிழ் பேசும் பிள்ளைகளின் ஆதரவை மட்டுமன்றி பொது வாசகர்களின் நன்மதிப்பையும் பெறும் என நம்புகிறேன். இம் முயற்சியை சடகோபன் அவர்களின் முக்கிய தமிழ்ப் பணியாகக் கருதி உளமாரப் பாராட்டுகின்றேன்.

**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்.**

**கல்விப் பீடம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
**16.09.2002.**

# 1

## கிறிஸ்தோபர் கொலம்பஸ்
(கி.பி.1451–1506)

"கொலம்பஸ்
மக்களின்
மகிழ்ச்சிக்காகவும்;
சுபீட்சத்துக்காகவும்;
பூகோளத்தின்
மற்றுமொரு
பாதையைத் திறந்து
விட்டவர் என்ற
பெருமைக்குரியவராவார்"

இத்தாலியின் சந்தடி மிகுந்த துறைமுக நகரம் ஜெனோவா. அதன் கடற்கரையில் அமர்ந்திருந்தான் ஒரு சிறுவன். அவன் கண்களில் சதா ஒரு கனவு மிதந்து கொண்டிருந்தது. அந்தக் கடலுக்கப்பால் இருக்கும் உலகம் பற்றி அவன் கடுமையாக யோசித்தான். உலகின் மற்ற பகுதிகளில் இருந்து கடல் கடந்து வந்த மாலுமிகள் சொல்லும் கதைகள் பற்றி அவன் கேள்விப்பட்டு இருந்தான்.



கிறிஸ்தோபர் கொலம்பஸ்

அந்தச் சிறுவன் வேறு யாருமல்ல. அவன்தான் பிற்காலத்தில் புகழ் பெற்ற மாலுமி **கிறிஸ்தோபர் கொலம்பஸ்.** இவரே அமெரிக்கா என்ற புதிய உலகைக் கண்டுபிடித்தவர்.

அக்காலத்தில் கிழக்குநாடுகளில் இருந்து ஐரோப்பாவை நோக்கி யானைத் தந்தம், பருத்தி, பட்டு மற்றும் வாசனைப் பொருட்கள் என்பன வந்து குவிந்த வண்ணம் இருந்தன. பல கப்பலோட்டிகள் கடல் கடந்து சென்று இவற்றைக் கொண்டு வந்தனர். இளமைப் பருவத்தை அடைந்திருந்த கொலம்பஸ் இத்தகைய கடற் பயணங்களை மேற்கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். மேற்குத்திசை நோக்கி பிரயாணம் செய்வதன் மூலம் சுருக்கு வழியில் இந்தியாவை அடைந்து விடலாம் என்று அவர் நினைத்தார். எல்லோரும் நினைப்பதைப் போல் உலகம் தட்டையாக இல்லை என்றும்; அது உருண்டையானது என்றும் கூறினார்.

இக் காலத்தில் கொலம்பஸைப் போலவே மேலும் பல மாலுமிகள் பாரிய கடற் பிரயாணங்களை மேற்கொண்டிருந்தனர். கொலம்பஸ் புதிய நிலப்பரப்பைக் கண்டுபிடிக்கும் நீண்ட கடற் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அதற்கான நிதி அவரிடம் இருக்கவில்லை. எனவே தனது உறவினர்கள், நண்பர்கள் மூலமாக ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் மன்னர்களின் உதவியை நாடினார். ஸ்பெயின் நாட்டின் அரசியும், மன்னரும் உதவியளிப்பதற்கு முன்வந்தனர். ஆனால் அதற்கு பிரதியுபகாரமாக புதிதாக கண்டுபிடிக்கப்படும் நாடுகளில் தமது ராஜ்யம் அமைய அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். இதற்கு இணங்கிய கொலம்பஸ் பிரயாண ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் திட்டமிட்டு பிரயாண ஏற்பாடுகளைச் செய்து முடித்துக்கொண்டார் கொலம்பஸ். 1492ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ம் திகதி அவர் ஸ்பெயின் நாட்டில் இருந்து புறப்பட்டார். எனினும் அவரிடம் குறைவான நிதியே காணப்பட்டது. நன்கு பயிற்சி பெற்ற மாலுமிகளும் இருக்கவில்லை. பிரயாணத்தின் போது ஊழியம் செய்வதற்கென கடுந் தண்டனை பெற்ற சிறைக் கைதிகள் வழங்கப்பட்டனர். கொலம்பஸ் தனது குழுவினரை மூன்று பிரிவுகளாக பிரித்தார். அவர்களை '**சாந்தமரியா**', '**பின்டா**', '**நினா**' என்ற மூன்று கப்பல்களில் பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்தார். அவர்கள்

நீண்ட கடற் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. பின்னர் பல துன்பங்களையும் சமாளித்து 1492ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ம் திகதியன்று அமெரிக்காவைச் சேர்ந்த **பஹாமஸ்** என்று அழைக்கப்டும் இடத்தைச் சென்றடைந்தனர். இவ்வாறே இவர் முதன் முதல் அமெரிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்தார்.

அதன் பின்னர் கொலம்பஸ் ஸ்பெயினில் இருந்து மேலும் பல கடற் பிரயாணங்களை மேற்கொண்டார். கியூபா, மேற்கிந்திய தீவுகள், ஜமேய்க்கா முதலான நாடுகளுக்குச் சென்றார். அவர் தனது நாட்டுக்குத் தங்கம், மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றுடன் செவ்விந்தியர்களையும் கொண்டு வந்து ஸ்பெயின் நாட்டு அரசிக்கும் மன்னருக்கும் பரிசாக வழங்கினார். அவர்கள் இந்தியா என்று கருதிய அமெரிக்காவின் பகுதிகளில் குடியேற்றங்களை அமைத்தனர்.

கிழக்குலகின் இந்தியாவைக் கண்டு பிடித்துவிட வேண்டும் என்று கொலம்பஸ் பெரிதும் முயற்சித்தார். ஆனால் அவருக்கிருந்த பிரச்சனைகள் காரணமாக அது கைகூடவில்லை. தொடர்ச்சியாக செய்த கடற் பிரயாணங்களால் அவர் சோர்வும், சஞ்சலமும் அடைந்திருந்தார். பின்னர் இந்த மகா கண்டுபிடிப்பாளர் 1506ஆம் ஆண்டில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இக் காலப்பகுதியிலேயே போர்த்துக்கேயர் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் வந்து சேர்ந்தனர்.

கொலம்பஸ் இந்தியாவை வந்தடையத் தவறினார் என்றாலும் அவர் இவ்வாயிரம் ஆண்டுகால மக்களின் மகிழ்ச்சிக்காகவும், சுபீட்சத்துக்காகவும், பூகோளத்தின் மற்றுமொரு பாதையைத் திறந்து விட்டவர் என்ற பெருமைக்கு உரியவராவார்.


2

## வில்லியம் ஷேக்ஷ்பியர்

(கி.பி.1564~1616)

"நல்ல நண்பர்களே!
ஆண்டவனின் பேரால்
கேட்கின்றேன்
என் உறக்கத்தைக்
கலைக்காதீர்கள்"

கடந்த ஆயிரம் ஆண்டு காலத்தில் வாழ்ந்து மறைந்த மாபெரும் இலக்கிய மேதைகளில் ஒருவர்தான் வில்லியம் ஷேக்ஸ்பியர். இவரை மிஞ்சிய இலக்கிய மேதை இன்னும் உலகில் பிறக்கவில்லை என்பார்கள். நாடகம், கவிதை ஆகிய துறைகளில் நவரசங்களான சிங்காரம், கோபம், வீரம், சாந்தம், கருணை, நகைப்பு, பயம், அற்புதம், இழிவு முதலான ரசங்களை மிக உயர்ந்த விதத்தில் பயன்படுத்தி வெற்றி கண்ட



வில்லியம் ஷேக்ஸ்பியர்

இவர், அதனால் புகழ் வானின் சிகரத்தை தொட்டவர்.

இத்தகைய மாமனிதரின் வாழ்வு பல மர்மங்கள் நிறைந்ததாகவே இன்றும் உள்ளது. இவரது வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு முக்கிய நிகழ்வுகள் எக்காலத்தில் நிகழ்ந்தன என்பன தொடர்பில் குழப்பங்கள் பல காணப்படுகின்றன. இவரது பிறந்த திகதி சரியாகத் தெரியவில்லை. ஆனால் 1564ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி இவருக்கு ஞானஸ்நானம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி அவரது பிறந்த ஊரான இங்கிலாந்தின் ஸ்ராட்போட் என்ற கிராமத்தில் அவொன் என்ற இடத்தில் இருந்த கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்றது.

இவரது குழந்தைப் பருவத்திலும், பின்னர் இளமைக் காலத்திலும் என்ன நடந்தது என்பதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. இவர் லத்தீன் மொழியில் புலமை பெற்றிருந்தார் என்றும் தனது சொந்தக் கிராமமான ஸ்ராட்போட் என்ற கிராமத்தை விட்டு பெருநகரான லண்டனுக்குச் சென்றுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

இவருக்கு 18 வயதானபோது இவர் ஆன் ஹத்வே என்ற பெண்ணை திருமணம் முடித்துள்ளார். ஆன் இவரை விட சில வருடங்கள் வயதில் மூத்தவளாக இருந்ததுடன் ஷேக்ஸ்பியரின் சொந்தக் கிராமத்தைச் சேர்ந்தவளுமாவாள். இவர்களுக்குப் பல குழந்தைகள் இருந்தன. அக் குழந்தைகளில் ஹம்நெட், ஜுடித் ஆகிய இரட்டையர்களும் உள்ளடங்குவர்.

இவர் எழுதிய நாடகங்கள் இவரை மாபெரும் நாடக இலக்கிய மேதை என்ற அந்தஸ்த்துக்கு உயர்த்தின. இவை மிகச் சிறந்த இலக்கிய நயம் கொண்டிருந்ததுடன் உணர்ச்சிப் பிரவாகமாகத் திகழ்ந்தன. லட்சக்கணக்கான ரசிகர்களைக் கவர்ந்தன. இவரது நாடகப் பாத்திரங்கள் மற்றும் அவற்றின் பெயர்கள் அவற்றைப் படித்திராத, பார்த்திராத மக்கள் மத்தியிலும் பிரசித்தி பெற்றன. இவற்றில் மிகப் பிரசித்தி பெற்ற நாடகங்கள் ரோமியோ-ஜூலியட் ஹம்லெட், மெக்பெத், ஜூலியஸ் சீசர் போன்றனவாகும்.

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் பின்வருவன :-

**ஹம்லெட், டுவெல்ப்த் நைட் (பன்னிரெண்டாம் நாளிரவு), தி டேமிங் ஒப் த ஸ்ரு (அடங்காப்பிடாரியை அடக்குதல்), ரோமியோ அண்ட் ஜூலியட், எ மிட் சம்மர் நைட்ஸ் ட்ரீம் (நடு வேனிற் கால இரவொன்றின் கனவு), ஒதெல்லோ, தி மேர்ச்சன்ட் ஒப் வெனிஸ் (வெனிசு நகர வணிகன்), ஜூலியஸ் சீசர், மெக்பெத்.**

இவரது நாடகங்களைப் போலவே இவரது கவிதைகளும் உயர் இலக்கியத் தரம் மிக்கனவாக இருந்தன. ஆனால் இவை நீண்ட காலத்திற்கு முன் எழுதப்பட்டவைகளாக இருப்பதனால் புரிந்து கொள்ளக் கடினமாக உள்ளன. எனினும் இவை உலக அளவில் வரவேற்கப்படுபவையாகவும், மிக அழகியல் தன்மை கொண்டும் உள்ளன. இவை காலத்தை வென்ற இலக்கியங்கள் ஆகும்.

ஷேக்ஸ்பியர் லண்டனில் வாழ்ந்த காலத்திலேயே இனி இல்லாதபடி பெயரும் புகழும் பெற்றுவிட்டார். இவர் தனது இறுதிக் காலத்தைக் கழிப்பதற்கென தனது சொந்த ஊரான ஸ்ராட் போட்டுக்கு வந்து, அங்கு தானே சொந்தமாகக் கட்டியிருந்த வீட்டில் வாழ்ந்தார். அக்காலத்திலேயே தனது இறுதிக்கால நாடகங்களையும் கவிதைகளையும் எழுதினார். இவர் 1616ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி இவ்வுலகில் இருந்து விடைபெற்றார்.

அதன்பின் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 23ம் திகதியானதும் இவரது கல்லறையில் மலர்கள் குவிந்தவண்ணம் உள்ளன. ஆயிரம் ஆண்டுகால இலக்கியமேதை ஒருவரின் ஞாபகார்த்தத்தைக் கொண்டாட இப்போதும் ஆயிரக் கணக்கான மக்கள் இங்கிலாந்தின் ஸ்ராட் போட் என்ற கிராமத்துக்குச் செல்கின்றார்கள்.

ஷேக்ஸ்பியர் தான் இறந்த பின்பு தனது கல்லறையில் பொறிக்கப்பட வேண்டுமென பின்வரும் கல்லறை வாசகத்தை எழுதி வைத்திருந்தார்.

அதில் கூறப்பட்டிருந்ததாவது :-

**“நல்ல நண்பர்களே!**
**ஆண்டவனின் பேரால் கேட்கின்றேன்**
**என் உறக்கத்தைக் கலைக்காதீர்கள்**
**என் நினைவுகளை சுமப்போர்**
**ஆசீர்வதிக்கப்படுவார்கள்**
**என் எலும்புகளை அசைப்பவர்களோ**
**சபிக்கப்படுவார்கள்.”**

3

# ஆபிரஹாம் லிங்கன்
(கி.பி.1809~1865)

"மக்களுக்காக
ஏற்படுத்தப்பட்ட
இந்த மக்கள் அரசாங்கம்
இந்த மண்ணில் இருந்து
மறைந்தொழிந்து
போய் விடலாகாது"

ஆபிரஹாம் லிங்கன் ஒரு ஏழை விவசாயின் மகனாவார். இளமைக் காலத்தில் மிகப்பல துன்பங்களை அனுபவித்தார். தனது அயரா முயற்சியால் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி என்ற நிலைக்கு உயர்ந்தார். அமெரிக்க நாட்டின் கெண்டகி மாகாணத்தில் பின்தங்கிய கிராமம் ஒன்றில் 1809ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதி பிறந்தார். இவரின் ஒன்பதாவது வயதிலேயே இவரது தாயார் இவ்வுலக வாழ்வை விட்டுப் பிரிந்துவிட்டார்.



ஏப்ரஹாம் லிங்கன்

ஆபிரஹாம் லிங்கன் பிறந்தது முதற்கொண்டு மிகுந்த ஏழ்மையில் வாடினார். அதனால் முறையாகப் பாடசாலையில் கல்வி கற்கும் வாய்ப்பு அவருக்கு இருக்கவில்லை.

அவர் சுய முயற்சியின் மூலமே எழுதவும், வாசிக்கவும், கணக்குகள் செய்யவும் கற்றுக் கொண்டார். மிகச் சிரமப்பட்டு படித்து 1836ம் ஆண்டு வழக்கறிஞராக தகுதி பெற்றார். அது வரையில் சிறுசிறு தொழில்களை செய்து உழைக்க வேண்டியிருந்தது. லிங்கன் 1842ம் ஆண்டு மேரி ஆன்டொட் என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். பின் இல்லினொய்ஸ் என்ற மாகாணத்துக்கு வந்து வாழ்க்கை நடத்தினார். அக் காலத்திலேயே அரசியலில் ஈடுபடும் ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது.

அக் காலப்பகுதியில் அமெரிக்காவின் தென்மாகாணங்களில் அடிமை வியாபாரம் அதிகம் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. ஆபிரிக்க நாட்டின் கறுப்பினத்தவர்களைப் பிடித்து வந்து அமெரிக்காவில் அவர்களை விற்று வந்தனர். இந்த வியாபாரத்தை எவ்வாறு அண்டை அயல் மாகாணங்களுக்கும் விஸ்தரிப்பது என்று அரசியல் தலைவர்களுக்கிடையில் பலமான விவாதம் ஏற்பட்டிருந்தது. அடிமை வியாபாரத்துக்கு ஆதரவாக ஒரு கட்சியினரும், எதிராக மற்றுமொரு கட்சியினரும் குரல் எழுப்பினர். தென் மாகாணங்களின் அரசியல் தலைவர்கள் அடிமை வியாபாரத்தை ஏனைய மாகாணங்களுக்கும் முழுமூச்சாக விஸ்தரிக்க முயற்சித்தனர். ஆபிரஹாம் லிங்கன் அந்த நடவடிக்கையை பலமாகக் கண்டித்தார்.

விரைவிலேயே அரசியலில் முழு மூச்சாக இறங்கிய லிங்கன் 1860ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். அத் தேர்தலில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். ஜனாதிபதி லிங்கன் அடிமை வியாபாரத்தை முழுமையாக எதிர்த்தார். அதனால் தென் மாகாணங்கள் மத்திய அரசில் இருந்து பிரிந்து தனியாகச் செல்லத் தொடங்கின. எல்லா மாகாண அரசுகளையும் மத்திய அரசுக்குள் இணைத்து வைத்திருக்க லிங்கன் மிகப்பாடுபட்டு உழைத்தார், ஆனால் அவரது முயற்சிகள் பலனளிக்காது போயின.

அதன் விளைவாக அமெரிக்க உள்நாட்டுப் போர் மூண்டது. இப்போர் சுமார் நான்காண்டுகள் வரை நீடித்தது.இந்தப்போர் மாகாண அரசுகளைப் பிரிந்து போகாமல் வைத்திருக்க மேற்கொள்ளப்பட்ட போராகவே இருந்தது. அது அடிமை வியாபாரத்தை ஒழிக்க ஏற்பட்ட போராக இருக்கவில்லை.

ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட உள்நாட்டுப் போரின் பேரழிவைக் கண்டு லிங்கன் பெரிதும் மனவேதனை அடைந்தார். இவர் போர் நடந்து கொண்டிருந்த பல பிரதேசங்களுக்கும் சென்று பார்வையிட்டார். அவ்விதம் சென்றபோது கெட்டிஸ்பர்க் என்ற சிறிய நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் அவர் மக்கள் மத்தியில் ஆற்றிய உரை உலகப் பிரசித்தி பெற்றது. கடந்த ஆயிரமாண்டு காலத்தில் அரசுத்தலைவர் ஒருவர் ஆற்றிய மிகப் புகழ் வாய்ந்த உரையாக இது கருதப்படுகின்றது.

லிங்கன் தனது பேச்சில் பின்வருமாறு கூறினார். "**இங்கே உயிர் நீத்தவர்கள் அனைவரும் வீணே இறந்து போனவர்களாகக் கருதப்படக் கூடாது. ஆண்டவனின் ஆளுகையின் கீழான இந்த தேசத்திற்கு இப்போது புதிய சுதந்திரம் கிடைத்துள்ளது. மக்களால், மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்த மக்கள் அரசாங்கம் இந்த மண்ணில் இருந்து மறைந்தொழிந்து போய் விடலாகாது**" என்று அவர் உணர்ச்சி பொங்க கூறினார்.

ஆயிரக்கணக்கான மக்களைப் பலி கொண்ட பின் அமெரிக்க உள்நாட்டு யுத்தம் 1864ம் ஆண்டு முடிவடைந்தது. இப்போரில் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் வெற்றி பெற்றனர். இரண்டாம் முறையாகவும் ஆபிரஹாம் லிங்கன் ஜனாதிபதியானார். பல புதிய, புதிய சட்டவிதிகள் ஆக்கப்பட்டன. லிங்கனின் புகழ் மேலும் செழித்தோங்கியது.

1865ம் ஆண்டு ஏப்ரல் 14ம் திகதி ஜனாதிபதியும் அவரது மனைவியும் வாஷிங்டனில் உள்ள கலையரங்கமொன்றில் நாடகம் ஒன்றை ரசிப்பதற்காகச் சென்றிருந்தனர். அங்கு வைத்து ஜோன் வில்க்ஸ் பூத் என்ற நடிகன் ஜனாதிபதியை அவரது பின்னால் இருந்து துப்பாக்கியால் சுட்டான். இதனால் காயமடைந்த ஜனாதிபதி லிங்கன் அடுத்தநாள் காலையில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவ்வாறு.............

**கறுப்பினத்தவரின் அடிமை வாழ்வை ஒழித்து,**
**வாழ்வின் உன்னதத்தை எய்தி,**
**உலக சரித்திரத்தில் தனக்கென**
**ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட**
**அமெரிக்க நாட்டின்**
**உயர் அரசியல் ஞானியெனத் திகழ்ந்த**
**மானிடத்துவத்தின் நண்பனான**
**அவ்வெளிய மனிதனின் வாழ்வு**
**முற்றுப் பெற்றது.**

# 4


## சார்ள்ஸ் டார்வின்

**(கி.பி.1809~1882)**

**"பரிணாம வளர்ச்சிக்கோட்பாடு என்பது எவ்வாறு உயிரினங்கள் உலகில் தோன்றி படிப்படியாக வளர்ச்சியடைந்தன என்பதை விளக்குவதாகும்"**

"உலகில் உயிரினங்கள் எவ்வாறு தோன்றின?" "வலிமை உள்ளவை மட்டுமே எஞ்சியிருக்கும்" என்பதன் பொருள் என்ன? போன்ற கேள்விகளுக்கு விடைகாண முயற்சி செய்து வெற்றியடைந்தவர் **சார்ள்ஸ் றொபர்ட் டார்வின்** என்ற விஞ்ஞான மேதை.

இவர் 1809ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதி இங்கிலாந்து நாட்டில் ஸ்ரூவ்ஸ்பர்ரி என்ற இடத்தில் பிறந்தார்.




**சார்ள்ஸ் டார்வின்**

புகழ் பெற்ற கேம்பிரிட்ஜ், எடின்பேர்க் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றார். பல்கலைக்கழகத்தில் இவர் வைத்திய கல்வி பயின்ற போதும் அதில் வெற்றி பெறவில்லை. உயிரினங்களின் இயற்கை வரலாற்றை ஆராய வேண்டும் என்பதிலேயே அதிக ஆர்வம் கொண்டார்.

இவரது பெயருடன் பரிணாம வளர்ச்சிக்கோட்பாடும் இணைந்தே காணப்படுவதாக கருதப்படுகின்றது. பரிணாம வளர்ச்சிக்கோட்பாடு என்பது எவ்வாறு உயிரினங்கள் உலகில் தோன்றி படிப்படியாக வளர்ச்சியடைந்தன என்பதனை விளக்குவதாகும். இவர் தனது விளக்கங்களை '**இயற்கைத் தேர்ச்சி**' என்ற தத்துவத்தின் அடிப்படையில் முன்வைத்தார். அதன் மூலம் குரங்கில் இருந்தே மனிதன் படிப்படியாக உருவாக்கம் பெற்றான் என்று நிரூபிக்க முயன்றார்.

சார்ள்ஸ் டார்வின் மிகப்பெரிய விஞ்ஞானத் தேடல் ஒன்றை மேற்கொள்வதற்காக 'பீகிள்' என்ற கப்பலில் 1831ம் ஆண்டு டிசம்பர் 27ம் திகதி புறப்பட்டார். சுமார் ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆராய்ச்சியில் ஈடுபட்டார். டார்வின் வாழ்வில் இடம்பெற்ற மிகமுக்கியமான நிகழ்வு இதுவாகும். இந்தப் பிரயாணத்தின் போது டார்வின் பல நாடுகளின் புதிய பல தாவரவகைகள், மிருகங்கள் முதலானவற்றை அறிந்து கொள்ளும் அனுபவத்தைப் பெற்றார். நீண்ட ஆராய்ச்சியின் பின் 1859ம் ஆண்டு புகழ்பெற்ற 'உயிரினங்களின் ஆரம்பம' என்ற இவரது நூல் வெளியிடப்பட்டது. உயிரினங்கள் சூழலுடன் நடத்தும் போராட்டமே வாழ்க்கை என்ற தத்துவத்தை இந்நூல் அடிப்படையாகக் கொண்டிருந்தது. சூழலுடன் இசைந்து வாழக்கூடிய மிருகங்களும், தாவரங்களுமே தொடர்ந்து உயர் வாழ்கின்றன என்றும், அவ்விதம் வாழக் கூடிய எதிர்காலப் பரம்பரையைத் தோற்றுவிக்கின்றன என்றும் இவர் விளங்கப்படுத்தினார்.

1871ம் ஆண்டு இவர் வெளியிட்ட 'மனிதனின் தோற்றுவாய்' என்ற நூல் 'மனிதனின் முன்னோர்கள் மனிதக் குரங்குகளே' என்பதற்கான சாத்தியப்பாட்டை ஆராய்வதாக இருந்தது. இக் கருத்துக்கள் இக்காலத்தில் பெரும் வாத விவாதங்களை உண்டு பண்ணின. கடவுளே மனித இனத்தையும், ஏனைய உயிரினங்களையும் உண்டாக்கினார் என்று நம்பிக்கை கொண்டவர்களை இக்கருத்துக்கள் கோபம் கொள்ளச் செய்தன.

இவற்றைவிட இவரது பிரயாண அனுபவங்கள், பிரயாணத்தின்போது கண்ட மிருகங்கள், தாவரங்கள், மலர் வகைகள், விதைகள், கடல் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள் பற்றியும் டார்வின் எழுதினார். இவற்றை 'பீகிளின் பிரயாணம்' என்ற நூலில் தொகுத்து 1836ம் ஆண்டு வெளியிட்டார்.

சார்ள்ஸ் றொபர்ட் டார்வின் 1882ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி இவ்வுலகில் இருந்து மறைந்தார். என்றாலும் இவர் இவ்வுலக மனிதரிடையே விட்டுச் சென்ற சிந்தனைக்குரிய கருத்துக்கள் தொடர்ந்தும் அலசி ஆராயப்பட்டு வருகின்றன. அவர் எழுப்பிய பல கேள்விகளுக்கு அடுத்துவரும் புத்தாயிரத்திலாவது விடை கிடைக்குமா என்று பலரும் முடியைப் பிய்த்துக் கொள்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா?

5

# கார்ல் மார்க்ஸ்

**(கி.பி.1818-1883)**

**"மனித வர்க்கத்தின் முதல் தேவை உணவு; உடை; உறையுள் என்பதை உலகுக்கு உணர்த்தியவர் கார்ல் மார்க்ஸ்"**

மனித குலத்தின் உயர்ச்சிக்கு கார்ல் மார்க்ஸ் என்ற பேரறிஞர் செய்துள்ள சேவையைப் போல் வேறு எவரும் செய்ததில்லை. உலகை ஆளப் பிறந்தவன் பணக்காரன் என்றும் அவனுக்கு ஊழியம் செய்து கைகட்டி வணங்கி நிற்பவனே பாட்டாளி என்றும் முன்பு கருதப்பட்டது. இந்த கருத்தை மாற்றி 'சகலரும் சமம்' என்ற தத்துவத்தைக் கூறி புரட்சியை ஏற்படுத்தியவர்தான் கார்ல் மார்க்ஸ். அதற்காக அவரை மனிதருள் மாணிக்கம் என்பர்.



கார்ல் மார்க்ஸ், ஏங்கல்சுடன் மார்க்ஸின் மூன்று புதல்வியர்

இன்று நாம் அனுபவிக்கும் சகல சுதந்திரங்களுக்கும் காரணமாக இருந்தவர் கார்ல் மார்க்ஸ்.

**"தத்துவ ஞானிகள்**
**உலகத்தை விளங்கப்படுத்தினார்கள்**
**நமது கடமை**
**உலகத்தை மாற்றியமைப்பதாகும்".**

என்று எடுத்துரைத்தார் மார்க்ஸ். தனது கொள்கைக்காக தன் வாழ்நாள் முழுவதும் போராட்டங்கள் பல நடத்தினார்.

மனிதனின் வாழ்க்கைக்கான மிக முக்கியத் தேவைகள் மூன்று உள்ளன. அவை உணவு, உடை, உறையுள்.எந்தவொரு தனி மனிதனுக்கும் இந்த மூன்றும் மறுக்கப்படக்கூடாது என்று இவர் கூறினார். இந்தக் கருத்தின் அடிப்படையிலேயே "கம்யூனிசம்", "சோஷலிசம்" ஆகிய சமூக விஞ்ஞான பொருளாதார தத்துவங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றை நடைமுறையில் செயல்படுத்த சர்வதேச தொழிலாளர் சங்கத்தை ஏற்படுத்தினார். அவர் கூறிய கருத்துக்களே இன்று சமதர்மக் கோட்பாடுகளாக உலகெங்கும் பின்பற்றப்படுகின்றன.

கார்ல் மார்க்ஸ் ஜெர்மன் நாட்டின் பிரஷ்யா என்ற பிரதேசத்தில் 1818ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி பிறந்தார். ரைன் நதிக் கரையோர சிறு நகரமான டிரியர் என்பதே இவரது பிறந்த ஊர். இவரது தந்தை ஒரு வழக்கறிஞர். இவருக்கு மூன்று சகோதரர்களும், ஐந்து சகோதரிகளும் இருந்தனர்.

தனது பள்ளிப்படிப்பை ஊர்ப்பள்ளிக்கூடத்திலேயே பூர்த்தி செய்தார். பின்னர் இவர் சட்டம் பயில்வதற்காக ஆரம்பத்தில் பொன் பல்கலைக்கழகத்திற்கும், பின் பெர்லின் பல்கலைக்கழகத்திற்கும் சென்றார். சட்டக் கல்வியைத் தவிர இலக்கியம், வரலாறு, அழகியற்கலை, சிற்பம், ஓவியம், தத்துவஞானம் முதலான துறைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். 1841ம் ஆண்டு பெர்லின் பல்கலைக்கழகத்திடமிருந்து தத்துவஞானத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

18ம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் இங்கிலாந்தில் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் ஐரோப்பாவில் பொருள் உற்பத்தியில் முதன்முதலாக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. ஐரோப்பாக் கண்டத்தில் பெரிய அளவில் கைத்தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. சிறு விவசாயிகள் நட்டமடைந்து கூலித்தொழிலாளர்கள் ஆனார்கள். இவர்களின் உழைப்புக்கு மிகக் குறைந்த கூலியே வழங்கப்பட்டது. கார்ல் மார்க்ஸ் இந்த சமூக அநீதிக்கு எதிராக வாதாடினார். இங்கிலாந்திலும், ஐரோப்பா எங்கும் இருந்த தொழிலாளர்களை இணைத்தார். சர்வதேச தொழிலாளர் சங்கத்தை உண்டாக்கினார்.

தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி வழங்கப்பட வேண்டும் என்று கூறி “கூலி, விலை, இலாபம்” என்ற நூலை எழுதினார். தொழிலாளர்களின் நலன் கருதியும், பொதுவான மனித குலத்தின் முன்னேற்றத்திற்காகவும், எண்ணற்ற கட்டுரைகளையும், ஆராய்ச்சி உரைகளையும் எழுதினார். அவற்றைப் பத்திரிகைகளில் வெளியிட்டார். இத்தகைய செயல்களுக்காக அரசாங்கம் இவரை பலமுறை நாடு கடத்தியது.

இவர் எழுதிய “மூலதனம்” என்ற நூல் உலகில் புதிய சமூக பொருளாதார முறை ஒன்றை உருவாக்கியது. இந்நூல் உலகெங்கும் உள்ள தொழிலாளர்களின் தாரக மந்திரமாகப் போற்றப்படுகின்றது. ரஷ்ய நாட்டில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி தோன்ற காரணமாக அமைந்தது. அதன் விளைவாக சோஷலிசப் பொருளாதாரம் உலகுக்கு அறிமுகப்படுத்த ப்பட்டது.

கார்ல் மார்க்ஸ் 1843ம் ஆண்டு தனது சகோதரியின் நெருங்கிய தோழியான ஜெனீ வொன் வெஸ்ட் பாலென் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். மார்க்ஸின் சிந்தனைகளையும், செயல்களையும் ஊக்குவிப்பதில் ஜெனீ பெரிதும் பங்கு கொண்டார். மார்க்ஸ் தம்பதியருக்கு மூன்று பெண் குழந்தைகள் இருந்தனர்.

கார்ல் மார்க்ஸ் என்ற பேரறிஞரின் நெருங்கிய தோழர் பிரெட்றிக் ஏங்கெல்ஸ். இவர் மற்றுமொரு சோஷலிச விஞ்ஞான தத்துவஞானியாவார். மார்க்ஸின் இறுதிக்காலம் வரை இணைந்து செயற்பட்டு மார்க்ஸின் சிந்தனைக்கும், எழுத்துத்துறைக்கும் உறுதுணை புரிந்தார்.

கார்ல் மார்க்ஸ் 1883ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார். அவரின் இறுதிச் சடங்கின்போது ஏங்கெல்ஸ் இரங்கலுரை நிகழ்த்தினார். மார்க்ஸ் மனிதகுலத்துக்கு செய்த அளப்பரிய சேவையைப் பற்றி எடுத்துரைத்தார்.

**"இயற்கை உயிரின வளர்ச்சியின் விதியினை**
**டார்வின் கண்டு பிடித்தது போல்**
**மனித வரலாற்றின் வளர்ச்சியின் விதியினை**
**மார்க்ஸ் கண்டுபிடித்தார். மனித வர்க்கத்தின்**
**முதல் தேவை உணவு, உடை, உறையுள்**
**என்பதை உலகுக்கு உணர்த்தினார்"**

அவற்றைப் பூர்த்தி செய்யும் உண்மையான பொருளாதார கொள்கை ஒன்றை மார்க்ஸ் உலகுக்கு விட்டுச் சென்றுள்ளார்.

**"அவரது பெயரும்,**
**அவரது சேவையும்**
**யுக யுகாந்திரங்களுக்கு**
**நிலைத்து நிற்கும்."**
**இவ்வாறு ஏங்கெல்ஸ் கண்ணீர் மல்க குறிப்பிட்டார்.**

பேரறிஞர் கார்ல் மார்க்ஸின் சமாதி லண்டனில் உள்ள ஹைகேட் மயானத்தில் இவரது மனைவியின் சமாதிக்கு அருகிலேயே அமைக்கப்பட்டது.

# அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்

**(கி.பி.1847~1922)**

**“பல்வேறு முயற்சிகள் மற்றும் நீண்ட ஆராய்ச்சிகளின் பின்னர் ஒலியை நீண்ட தூரம் கடத்திச் சென்று செவிமடுக்க முடியும் என்பதனைக் கண்டுபிடித்தார் அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்”**

இன்றைய உலகில் தொலைபேசி கருவி இல்லாத வீடுகளே இல்லை என்று கூறுமளவுக்கு தொலைபேசி பாவனை அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக கையடக்கமான தொலைபேசி கருவியினையும் பலரும் கையில் எடுத்துச் செல்கின்றனர். தொலைபேசி இல்லாத உலகினை இன்று கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாது. இன்னும் சில ஆண்டுகளில் உலகளாவிய தொலைத்தொடர்பு முறை ஒன்று தோன்றி விடும்.




அலெக்ஸான்டர் கிரஹாம்பெல்

இது கிரகங்களுக்கூடான ஒரு தொலைத்தொடர்பு வலைப்பின்னல் முறையாக வளர்ச்சியடைந்திருக்கும்.

இத்தகைய ஒரு உயர்வான தொலைபேசிக் கருவியை 1876ம் ஆண்டு **அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல்** என்பவர் கண்டுபிடித்தார். அலெக்ஸாண்டர் 1847ம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் திகதி ஸ்கொட்லாந்தின் எடின்பர்க் என்ற இடத்தில் பிறந்தார். இவர் தனது இருபதாவது வயதில் குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து கனடாவுக்கு குடிபெயர்ந்து சென்றார். இவரின் குடும்பத்தினர் அனைவருமே தொண்டை மற்றும் குரல் பாதிக்கப்பட்டோருக்கான வைத்தியத்துறையில் ஈடுபட்டிருந்தனர்.இவர்களது தொழில் செவிப்புலன் ஊனமுற்றோர் தொடர்பிலும், பல்வேறு குரல் அபிவிருத்தி தொழில் நுட்பங்கள் தொடர்பிலுமான பரிசோதனைகளுடன் தொடர்புற்றிருந்தது. அலெக்ஸாண்டரும் இதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் 1872ம் ஆண்டு அவரது இருபத்தைந்தாம் வயதில் ஐக்கிய அமெரிக்காவின் பொஸ்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக நியமனம் பெற்றார். பல்கலைக்கழகத்தில் இவர் ஒலியை எவ்வாறு நீண்ட தூரம் கடத்திக் கொண்டு செல்லலாம் என்பது தொடர்பான பரிசோதனைகளில் ஈடுபட்டார். இந்தப் பரிசோதனைகள் இவரை ஒலி அலைகள், ஒலியை செவிமடுப்பதற்கான முறைகள், ஒலி அதிர்வுகள், ஒலியைக் கடத்திச் செல்லும் ஊடகம் முதலான பரிசோதனைகளிலும் ஈடுபடத்தூண்டியது.

பல்வேறு முயற்சிகள் மற்றும் நீண்ட ஆராய்ச்சிகளின் பின்னர் ஒலியை நீண்ட தூரம் கடத்திச் சென்று செவிமடுக்க முடியும் என்பதனைக் கண்டுபிடித்தார்.

இவரது ஆராய்ச்சியின் விளைவாக இவரால் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது தொலைபேசிக் கருவி ஒரு ஒலிபரப்பியையும், செவிக்குழலையும் கொண்டு அமைந்ததாக இருந்தது. இது மின்காந்தத்தின் உதவியில் இயங்கியது. அதன் பின்னர் 1876ம் ஆண்டு முழு வசனத்தையும் மற்றோர் இடத்திலிருக்கும் இன்னொருவருடன் பேசக் கூடியதாக கருவி ஒன்றைத் தயாரித்தார். அதுவே தொலைபேசிக் கருவியாக வளர்ச்சியடைந்தது. அலெக்ஸாண்டர் மேலும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு 'கிராமபோன்' என்ற கருவியையும் கண்டுபிடித்தார்.

பிற்காலத்தில் அலெக்ஸாண்டர் கண்டுபிடித்த தொலைபேசிக் கருவிக்கு பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. எண்களை சுழற்றி அழைப்பதற்குப் பதில் பொத்தானை அழுத்தும் முறை வந்தது. பாரிய அமைப்பாக இருந்த தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் தானியங்கி அழைப்பு தொடர்புபடுத்தல் முறையால் பிரதியீடு செய்யப்பட்டது. எது எப்படி இருந்தபோதும் தொலைபேசி தொடர்பான அலெக்ஸாண்டரின் அழைப்புக் கோட்பாடு மாறவில்லை. இந்த ஆயிரம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டு தனிமனிதர்களுக்கிடையிலான மிகச் சிறப்பான தொடர்பு சாதனமாக தொலைபேசியே இப்போதும் இருந்து வருகின்றது.

அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் 1922ம் ஆண்டு வரை வாழ்ந்திருந்தார். இவரது ஆராய்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விஞ்ஞானக் கொள்கைக்காக இவருக்கு பின்னர் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. இவரது கண்டுபிடிப்புகளின்போது இவருக்கு உதவியாக, இவரது ஆராய்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டு செயற்பட்டவர் தோமஸ் வட்சன் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இருவரும் இணைந்து பிரேசில் நாட்டின் அரசர், இங்கிலாந்தின் விஞ்ஞானிகளில் ஒருவரான சேர். வில்லியம் தொம்சன், அப்போது தொலைபேசி கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மற்றுமொரு விஞ்ஞானியான எலிசா கிறே ஆகியோர் முன்னிலையில் 1876ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் திகதி தமது முதல் தொலைபேசிக்கருவி இயங்கும் விதத்தினை செய்து காட்டி அவர்களை வியப்படையச் செய்தனர்.

7


# மகாத்மா காந்தி

**(கி.பி.1869–1948)**

**"இவரது போராட்டம் 'அஹிம்சா வாதம்' என்ற வன்முறையற்ற சமாதான வழியிலான போராட்டமாகவே இருந்தது. சத்தியாக்கிரகமும்; உண்ணா விரதமுமே இவரது போராட்ட ஆயுதங்களாக இருந்தன"**

அஹிம்சா தத்துவத்தின் தந்தையான மகாத்மா காந்தி எளிமையான தோற்றம், ஆடம்பரமற்ற வாழ்க்கை, முழு மனித குலத்தையும் மேன்மைப்படுத்த வேண்டும் என்ற சீரிய குணம் என்பவற்றுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். அதன் காரணமாக மகாத்மாவாக வரலாற்றில் இடம்பெற்றவர்.

இவரது இயற்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பதாகும்.



மகாத்மா காந்தி

வட இந்தியாவின் போர்பந்தர் என்ற கிராமத்தில் 1869ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி பிறந்தார். அப்போதிருந்த குல வழக்கங்களின்படி மிக இளம் வயதிலேயே இவரது பெற்றோர் இவருக்கு கஸ்தூரிபாய் என்ற பெண்ணை திருமணம் செய்து வைத்தனர். பின்னர் லண்டனுக்குச் சென்ற இவர் சட்டம் பயின்று பாரிஸ்டர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அதன்பின் தென்னாபிரிக்காவிற்குச் சென்று சட்டத்தொழில் செய்து வந்தார். தென்னாபிரிக்காவில் ஆங்கிலேயர் ஆட்சியில் கறுப்பினத்தவரும், இந்தியப் பிரஜைகளும் கொடுமைகளுக்கு உட்படுத்தப்படுவதைக் கண்டு வேதனையடைந்தார். அதற்கெதிராகக் குரல் எழுப்பியமைக்காக ஆங்கிலேய அதிகாரிகள் அவரைப் பலமுறை சிறை வைத்தனர்.

அதன் பின் தன் தாய்நாடான இந்தியாவுக்கும், அதன் மக்களுக்கும் சேவைபுரிய வேண்டுமென்று உறுதி செய்து கொண்டார். அந்த இலட்சியத்தை நிறைவேற்ற காந்தி இந்தியாவிற்கு திரும்பினார். ஆங்கிலேயரின் கொடுமையான ஆட்சிப்பிடியில் சிக்கித் தவித்த இந்தியா பல உள்நாட்டுப் பிரச்சினைகளாலும் பாதிப்படைந்திருந்தது. சாதி, மதம், மொழி, வறுமை முதலிய பிரச்சனைகளால் அது சீரழிந்து போயிருந்தது. பெண்கள் ஆண்களின் அடிமைகளாகக் கருதப்பட்டனர். சீதனமில்லாமல் திருமணம் செய்ய முடியாமல் இருந்தனர். கணவனை இழந்த விதவைகள் மீண்டும் திருமணம் செய்ய முடியாது. அவர்கள் 'உடன் கட்டை ஏறுதல்' என்ற மூடத்தனமான வழக்கத்தின்படி கணவனின் இறந்த உடலுடன் வைத்து எரிக்கப்பட்டனர்.

இத்தகைய சமூக அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும், அதே சமயம் இந்தியாவை ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்து விடுதலை செய்வதற்காகவும் காந்தி போராட்ட இயக்கமொன்றை ஆரம்பித்தார்.

இவரது போராட்டம் 'அஹிம்சா வாதம்' என்ற வன்முறையற்ற சமாதான வழியிலான போராட்டமாகவே இருந்தது. அதனால் அனைத்துலகினதும் கவனத்தைக் கவர்ந்தது. சத்தியாக் கிரகமும், உண்ணா விரதமுமே இவரது போராட்ட ஆயுதங்களாக இருந்தன. இவர் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த சமூகத்தின் உயர்வுக்காகவும் உழைத்தார். சகல இன, மொழி மதத்தவரும் சமமாகக் கருதப்பட வேண்டுமென வாதாடினார். கல்வியிலும்,

தொழிலிலும் பெண்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

1918ம் ஆண்டளவில் பிரித்தானிய ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக சகல இந்திய மக்களையும் இணைக்கும் முயற்சியில் வெற்றி பெற்றார். ஆடம்பர வாழ்வை வெறுத்த இவர் பருத்தி நூலினால் நெய்யப்பட்ட எளிமையான சால்வையொன்றையும், வேஷ்டியையுமே ஆடைகளாகப் பயன்படுத்தினார். தனக்கு நேரம் கிடைத்த பொழுதுகளில் எல்லாம் 'கைராட்டையைக்' கொண்டு பருத்தி துணி நெய்வதில் ஈடுபட்டார். சகலருக்கும் பேச்சு, செயல் என்பவற்றில் நேர்மை வேண்டும் என்பதனை உணர்த்தினார். மது பாவனையை எதிர்த்ததுடன் சைவ உணவுகளை மட்டுமே உண்டார்.

இவரது அஹிம்சா போராட்டம், சத்தியாக் கிரகம், உண்ணா விரதம் ஆகிய போராட்டங்களின் முன்னிலையில் பிரித்தானிய ஆங்கிலேய பேரரசு வெட்கித் தலை குனிந்தது. 1947ம் ஆண்டு தம் தோல்வியை ஒப்புக்கொண்டு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கியது. எனினும் பிரித்தானிய ஆங்கிலேய ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரம் இந்தியா - பாகிஸ்தான் என்ற இரு நாடுகளாக இந்தியா பிரிக்கப்பட்டது. இதனால் பெரிய அளவில் இந்து முஸ்லிம் கலவரங்கள் மூண்டன. தேசிய ஒற்றுமைக்காகவும், இன, மத, மொழி, சாதி ஒற்றுமைக்காகவும் போராடி வந்த மகாத்மா காந்தி பெரிதும் வேதனையடைந்தார்.

இந்த நிலையிலும் இந்து-முஸ்லிம் இன ஒற்றுமையை காந்தி வலியுறுத்துவதை இந்துமத வகுப்பு வாதிகள் விரும்பவில்லை. இதன் காரணமாக இத்தகைய இந்துமத வகுப்பு வாத அமைப்பின் உறுப்பினன் ஒருவனால் 1948ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் திகதி மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார்.

**"இறைவனுக்கன்றி நான் யாருக்கும்**
**பயப்பட மாட்டேன். இவ்வுலகில் நான்**
**எவ்வுயிர்க்கும் தீங்கு நினைக்கமாட்டேன்".**

என்று அஞ்சா நெஞ்சுடன் கூறிய 'மகாத்மா' என்ற மாமனிதனின் அஸ்த்தி அவர் விருப்பப்படி கங்கை, யமுனை ஆகிய ஆற்றுப் பிரவாகங்களில் கரைக்கப்பட்டது.


8

# அல்பர்ட் ஐன்ஸ்டின்

**(கி.பி.1879~1955)**

**"ஐன்ஸ்டின் நுண்ணிய துணிக்கை அளவான அணுக்கருவில் இருந்து மிகப் பாரிய பெருக்குச் சக்தியை பெற முடியும் என்று நிருபித்தார்"**

மானிட வரலாறு ஒரே சீரான வளர்ச்சியை எப்போதும் கொண்டிருக்க வில்லை. வரலாற்றில் அவ்வப்போது அவதரித்த ஞானிகள், மாமனிதர்கள், மேதைகள் ஆகியோர் வரலாற்றை வேகமாக வளரச் செய்தார்கள். அத்தகையவர்களில் ஒருவர்தான் அதிமானுடன் **அல்பர்ட் ஐன்ஸ்டின்**.




அல்பர்ட் ஐன்ஸ்டின்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் அல்பர்ட் ஐன்ஸ்டின் செய்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் இந்த நூற்றாண்டை மாபெரும் மனித வளர்ச்சிக் காலமாக பரிணமிக்கச் செய்தது. ஐன்ஸ்டின் அமைத்துக் கொடுத்த பௌதிக விஞ்ஞான தத்துவங்களின் மீதுதான் இருபதாம் நூற்றாண்டின் நவீன பௌதிக விஞ்ஞானம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது எனலாம்.

அல்பர்ட் ஐன்ஸ்டின் 1879ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி ஜெர்மனியில் அல்ம் என்னும் நகரத்தில், யூதர் இனத்தில் பிறந்தார். ஆரம்ப காலத்தில் அதிக கூச்ச சுபாவம் கொண்டிருந்த ஐன்ஸ்டின் கணிதபாடத்தில் மாத்திரமே அதிக விருப்புடையவராக இருந்தார். தனது இளமைக் காலத்தில் காந்தம், புவியீர்ப்பு, திணிவு, சக்தி முதலான விஞ்ஞான கருத்துக்களை கணித அடிப்படையில் சிந்தித்து பல கேள்விகளுக்கு விடைகாண முற்பட்டார். பல இரவுகள் தூங்காமல் சிந்தித்தார்.

விரைவிலேயே இவர் தமது கல்லூரி ஆசிரியர்களின் கணித அறிவுக்கு சவாலாக அமைந்தார். அதனால் கல்லூரியிலிருந்து விலக்கப்பட்டார். பின்னர் பல இடங்களில் அலைந்த பின் ஜூரிச் நகரில் பல் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்தார். இதனால் தனது விருப்பத்திற்குரிய பாடங்களான கணிதம், பௌதிகம் ஆகிய துறைகளில் படிக்க முடிந்தது. இவர் தனது ஓய்வு நேரத்தை வயலின் வாசிப்பதிலும், இசை நாடகங்களுக்குச் செல்வதிலும் கழித்தார். வயலின் மீதும் அவருக்கு அபாரமான ஆர்வம் ஏற்பட்டிருந்தது.

எந்த நேரமும் கணிதம், பௌதிகம் என்று ஆராய்ச்சியிலும், சிந்தனையிலும் அவர் மனம் ஈடுபட்டிருந்தது. அதனால் அவர் மேற்கொண்ட ஆசிரியத் தொழிலில் அவரால் சரியாக ஈடுபடமுடியவில்லை. தனது ஆராய்ச்சிக்கு ஏற்ற விதத்தில் சுதந்திரமான சூழ்நிலையைத் தேடிச் சென்று சுவிட்சர்லாந்தில் குடியேறினார். தன் வாழ்வை கொண்டு நடத்த எழுதுவினைஞர் தொழில் ஒன்றைத் தேடிக் கொண்ட ஐன்ஸ்டின் தொடர்ந்து விஞ்ஞான ஆராய்ச்சியிலும், மேற்படிப்பிலும் ஈடுபட்டார்.

பின்னர் ஜூரிச் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக தன்னைப் பதிவு செய்து கொண்டார். 1905ம் ஆண்டு கலாநிதி தேர்வைப் பூர்த்தி செய்து டாக்டர் பட்டம் பெற்றார். இக்காலத்தில் இவர் திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி இருந்தார். இதே ஆண்டிலேயே இவர் தனது புகழ்பெற்ற பௌதிக விஞ்ஞானக் கோட்பாடான 'சார்பியற் கொள்கை'யை உலகுக்கு வெளியிட்டார்.

இவரது சார்பியற் கொள்கை பௌதிக விஞ்ஞானத்தில் பெரும் திருப்பு முனையாக அமைந்தது. இவர் தனது கொள்கையில் அசைவு எப்போதும் சார்புடையதாகவே இருக்கும் என்று கூறினார். அதன் பிரகாரம் அசைவின் வேகம் தனியானதல்லவென்றும் அசைவின் வேகத்தை நாம் சார்புபடுத்தியே பார்க்க வேண்டும் என்றும் விளக்கினார். ஒளியின் வேகமான செக்கனுக்கு 186,000 மைல் என்பது மாறிலியாகும் என்றும் தெளிவுபடுத்தினார்.

ஐன்ஸ்டின் விரைவிலேயே உலக வரலாற்றில் பெரும் மாற்றத்தை உண்டுபண்ணிய தனது 'அணுச்சக்தி' தொடர்பான கொள்கையை வெளியிட்டார். **'$E = MC^2$'** என்ற சூத்திரத்தின் மூலம் தனது கோட்பாட்டை வெளியிட்ட அவர் ஒரு மிக நுண்ணிய துணிக்கை அளவான அணுக்கருவில் இருந்து மிகப் பாரிய பெருக்குச் சக்தியை பெற முடியும் என்று நிரூபித்தார். இக்கோட்பாடு மிகப் பெரிய அழிவுச் சக்தியான அணுகுண்டின் தோற்றத்துக்கு வழி வகுத்தது. எனினும் பல விஞ்ஞான ஆக்க நடவடிக்கைகளுக்கும் காரணமாக அமைந்தது. இவரது வியத்தகு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்காக 1921ம் ஆண்டு பௌதிகத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்கு முற்பட்ட காலத்தில் ஜெர்மனியில் ஹிட்லரின் நாஸிப்படையினர் யூதர்களைக் கொன்று குவித்தனர். இதனால் இக்காலத்தில் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஐன்ஸ்டின் அங்கேயே தங்கிவிட்டார்.

ஐன்ஸ்டின் தனது இறுதிக்காலத்தில் தனது மூன்றாவது விஞ்ஞானக் கோட்பாடான 'ஐக்கிய வெளித் தத்துவத்தை' வெளியிட்டார். தனது இறுதிக்காலம் வரை இத்தத்துவத்தை மேலும் ஆராய்வதிலேயே செலவிட்டார். இறுதியில் இவர் 1955ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் திகதி தனது 76வது வயதில் மறைவுற்றார்.

ஆரம்பத்தில் இவரை ஒதுக்கிப் புறக்கணித்த பல பல்கலைக்கழகங்கள் பிற்காலத்தில் பல பட்டங்களையும் பதவிகளையும் அளித்துப் புகழ்ந்து போற்றின. இவர் தான் மேற்கொண்ட எல்லா பிரயாணங்களின் போதும் தமது வயலினையும் கூடவே எடுத்துச் செல்வார். மிகுந்த மனித நேயம் மிக்கவராகவும் இருந்தார்.

இவர் கண்டுபிடித்த அணுச்சக்தியே கடந்த ஆயிரம் ஆண்டு காலப்பகுதியில் மிகப்பெரிய அழிவுச் சக்தியாக இருந்துள்ளது. இதனை இவர் முன்னரேயே அறிந்திருந்தால் அந்த ஆராய்ச்சியில் அவர் ஈடுபடாமல் இருந்திருக்கக்கூடும். அவர் வரலாற்றில் இடம்பிடித்திருக்கவும் மாட்டார்.

9

# அடோல்ப் ஹிட்லர்

(கி.பி.1889~1945)

"உலகின் சகல நாடுகளையும் தனக்கு அடிமையாக்கி அனைத்துலகுக்கும் தான் ஒருவனே தலைவன் ஆகவேண்டுமென்று கருதியவர் ஹிட்லர்"

உலக வரலாற்றில் ஆழக் கால் பதித்த உன்னதமான மாமனிதர்களையே நாம் போற்றி நினைவு கூர வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனாலும் இரண்டாம் உலக மகாயுத்தம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த சுமார் 500 இலட்சம் மக்களைக் கொன்று குவித்த ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரியான **அடோல்ப் ஹிட்லர்** போன்ற கொடூரமானவர்களும் வரலாற்றில் இடம்பெறத்தான்




**அடோல்ப் ஹிட்லர்**

செய்கின்றார்கள். கடந்த ஆயிரம் ஆண்டு காலப்பகுதியில் ஹிட்லருக்கு நிகரான கொடூரமனம் கொண்டவர் வேறு எவரும் இருந்ததில்லை என்று கருதப்படுகின்றது.

உலகின் சகல நாடுகளையும் தனக்கு அடிமையாக்கி அனைத்துலகுக்கும் தான் ஒருவனே தலைவன் ஆகவேண்டுமென்று கருதியவர் ஹிட்லர். அதனால் அவரை ஒரு கொடிய பேராசைக்கார பைத்தியக்காரனாகவே உலகத்தோர் கருதினர். அவரது வாழ்க்கை இக்கூற்றுக்கு முற்றிலும் சாட்சி கூறுவதாகவே அமைந்தது.

அடோல்ப் ஹிட்லர் 1889ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் திகதி ஒஸ்திரிய நாட்டின் எல்லைப்புறத்தில் சிறிய நகரமொன்றில் பிறந்தார். இவரது இளமைக்காலம் மிகக் கடினமானதாகவே இருந்தது. பல்வேறு ஒழுக்கமற்ற செயல்களின் விளைவாக இவரால் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. பின்னர் ஒஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவுக்குச் சென்றார். அங்கு ஒரு ஓவியப் பாடசாலையில் சேர முற்பட்டாலும் அவரால் பிரவேசப் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை. அவர் தொடர்ந்தும் வாழ்வைக் கசப்பான அனுபவங்களுடனேயே நடத்தினார்.

இதனால் தன் மீதும், வாழ்வு மீதும் மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது. கல்விமான்களையும், உயர் கலாசாரத்தையும் தூற்றினார். பணத்தையும் அதிகாரத்தையும் பெற எந்த விதமான ஈனச் செயலையும் செய்யத் தயாராக இருந்தார். பின்னால் தன் வாழ்வை கொண்டு நடத்த முடியாத நிலையில் ஜெர்மனிக்குச் சென்று இராணுவத்தில் சேர்ந்து மூனிச் நகரில் கடமையாற்றினார்.

1914ம் ஆண்டு ஜெர்மன் இராணுவத்தில் சாதாரண போர் வீரனாகவே ஹிட்லர் இருந்தார். 1920ம் ஆண்டளவில் ஜெர்மன் இராணுவத்தின் தலைமைப் பதவி வரை முன்னேறியிருந்தார். அவரது அடக்கு முறையுடன் கூடிய கொடூரகுணம் இராணுவத்தில் பதவி உயர்வுகள் பெற வழி வகுத்தது. தன் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த பலரையும் அவர் அழித்தொழித்தார்.

1921ம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மனியின் 'நாஸி' என்ற கட்சியின் தலைவரானார். 'நாஸி' என்பது ஜெர்மன் தேசிய சோஷலிச தொழிலாளர் கட்சி என்பதன் சுருக்கமாகும். இந்தக் கட்சிக்கு ஜெர்மனியின் மிகப் பெரிய வர்த்தகர்களும், தொழில் அதிபர்களும், பணக்காரர்களும் ஆதரவு வழங்கினர். அவர்கள் ஒரு சக்தி வாய்ந்த நாடாக ஜெர்மன் உருவாவதை விரும்பினர். ஜெர்மனியின் 'ஆரிய' இனத்தவரே உலகின் உயர்ந்த ஜாதியினர் என்றனர். ஹிட்லர் போன்ற சர்வாதிகாரி ஒருவராலேயே உலகை அடிமைப்படுத்த முடியும் என்று நம்பினர்.

நாஸிக்கட்சியினர் ஜெர்மனியில் வாழ்ந்த யூதர்களை வெறுத்தனர். யூதர்களை அவர்கள் சுற்றி வளைத்துப் பிடித்து சித்திரவதை முகாம்களில் அடைத்துக் கொடுமைகள் செய்து கொன்றனர். இதற்கென ஹிட்லர் தனது பொலிஸ் படையில் 'கெஸ்ட்டாபோ' என்ற இரகசிய படைப் பிரிவை அமைத்து செயற்படுத்தினார். உலகிலேயே மிகக் கொடூரமானதும், வெறுக்கத்தக்கதாகவும் இப் பொலிஸ் படைப்பிரிவு இருந்தது. இதனைப் போலவே ஹிட்லரின் இரகசிய இராணுவமான 'இரகசிய சேவை' என்ற படை மனித உரிமைக்கு எதிரான பல காரியங்களில் ஈடுபட்டது. இவர்கள் பெண்களையும், முதியோரையும், சிறுவர்களையும், குழந்தைகளையும் வித்தியாசமின்றி கொலை செய்தனர். இக்கொடிய செயல்களில் ஹிட்லர் நேரடியாகவே கலந்து கொண்டார். இந்த அழிவு நடவடிக்கைகளால் 150 இலட்சம் மக்களுக்கும் அதிகமானவர்கள் இறந்தனர். நாஸிகள் 50 இலட்சத்துக்கும் அதிகமான யூத இனத்தவரைக் கொன்றனர். எண்ணற்றோர் தம் உற்றார் உறவினரை இழந்து அநாதைகள் ஆகினர்.

1936ம் ஆண்டளவில் மேற்கு ஐரோப்பாவைக் கைப்பற்றும் ஹிட்லரின் நடவடிக்கை ஆரம்பமானது. அயல்நாடுகளை நோக்கி படைகள் அனுப்பப்பட்டன. 1938ம் ஆண்டு ஒஸ்திரியாவைத் தாக்கி கைப்பற்றியதுடன் அடுத்த வருடத்திலேயே செக்கோசிலேவாக்கியாவையும், போலந்தையும் கைப்பற்றினார். இந்த சர்வாதிகாரப் போக்கால் பல நாடுகள் ஜெர்மனிக்கெதிராக இணைந்து போரிடத் தீர்மானித்தன. பலம் வாய்ந்த நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா முதலான நாடுகள் ஓரணியில் திரண்டன. இதனால் இரண்டாம் மகா யுத்தம் ஆரம்பமானது. ஜெர்மனி உலகின் அனைத்து நாடுகளுடனும் யுத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டது. கடந்த ஆயிரம் ஆண்டு காலப்பகுதியில்

இப்போரினால் ஏற்பட்ட அழிவே மிகக் கொடூரமான பேரழிவாக அமைந்தது.

ஹிட்லர் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றி இறுதியாக சோவியத் ரஷ்யாவைக் கைப்பற்ற முயற்சி செய்தார். சோவியத் ரஷ்யாவின் லெனின் கிராட் என்ற நகரில் அந்நாட்டின் 'செம்படையுடன்' மோதல் ஏற்பட்டது. ஹிட்லரின் வீழ்ச்சி இவ்விடத்திலேயே ஆரம்பமாகியது. வெற்றி பெற்ற செம்படையினர் நாஸிப்படையை விரட்டியடித்தனர். 1945ம் ஆண்டு மே மாதம் செம்படையினர் ஜெர்மனியின் தலைநகரான பெர்லினைக் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து ஹிட்லர் தனது சொந்த யுத்தப் பதுங்கு குழியில் வைத்து 1945ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி தன்னைத் தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

இவ்வாறு ஒரு கொடூர மனம் கொண்ட சர்வாதிகாரி இவ்வாயிரமாண்டு கால வரலாற்றில் இடம் பிடித்துக்கொண்டான்.

**இவ்வாறு,**
**ஒரு கொடூர மனம் கொண்ட சர்வாதிகாரி**
**இவ்வாயிரமாண்டு கால வரலாற்றில்**
**இடம் பிடித்துக்கொண்டான்.**

10


# நீல் ஆம்ஸ்ட்ரோங்

(பிறப்பு~1930)

"விண்வெளி வீரர்
நீல் ஆம்ஸ்ட்ரோங்
ஒருமுறை
இலங்கை வந்திருந்தார்.
இவர்
தான் சந்திரனிலிருந்து
கொண்டு வந்த
பாறையின் ஒரு துண்டை
இலங்கைக்குப்
பரிசளித்தார்"

மனித வரலாற்றில் 1969ம் ஆண்டு ஜுலை மாதம் 20ம் திகதி ஒரு முக்கியமான திருப்புமுனை ஏற்பட்டது. அன்றுதான் மனிதர்களுள் ஒருவன் வானத்தில் ஏறிச் சென்று நிலவில் காலடி எடுத்து வைத்தான். அவன் பெயர்தான் **நீல் ஆம்ஸ்ட்ரோங்**..

நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் காலடி எடுத்து வைத்ததும் பின்வரும் செய்தியை உலகத்துக்கு அறிவித்தார்.



நீல் ஆம்ஸ்ட் ரோங்

லட்சக்கணக்கான மக்கள் தொலைக்காட்சி மூலம் அந்தக் காட்சியை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

அவர் கூறினார்......
“நான் சந்திரனில் எடுத்து வைக்கும்
இந்த முதல் காலடி
மனித குலத்தின் மிகப் பெரிய
பாய்ச்சலுக்கு சமமானதாகும்”.

இந்த வார்த்தைகள் அன்று அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சகலரதும் காதுகளில் “கிங்கிணி” நாதமென ரீங்காரம் செய்தன. இவ்வாறு அண்டவெளியில் உள்ள மற்றுமொரு கிரகத்தில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதன் என்ற பெருமையை நீல் ஆம்ஸ்ட்ரோங் பெற்றுக்கொண்டார்.

நீல் ஆம்ஸ்ட்ரோங் 1930ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி அமெரிக்காவின் ஒகியோ மாநிலத்தில் பிறந்தார். பெர்டியூ பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டத்தையும், தென் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்தையும் பெற்றார்.

1949 முதல் 1952ம் ஆண்டு வரையில் விமானப்படையில் விமானியாகத் தொழில் செய்தார். 1955ம் ஆண்டு விமானத்துறை தொழில் நுட்ப ஆலோசனைச் சபையிலும் பின் ‘நாஸா’ விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலும் பணி புரிந்தார். 1962ம் ஆண்டு ‘நாஸா’ விண்வெளி ஆராய்ச்சி நிலையம் இவரை விண்வெளி வீரராகத் தெரிவு செய்தது. 1966ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் திகதி அவர் ‘ஜெமினி 8’ விண்வெளிக் கப்பலில் பறப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின் பல்வேறு விண்வெளிப் பயிற்சிப் பிரயாணங்களில் கலந்து கொண்டார்.

1969ம் ஆண்டு நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனுக்குப் புறப்பட்டார். அவருடன் எட்வின் அலட்ரின், மைக்கல் கொலின்ஸ் ஆகிய வேறு இரண்டு விண்வெளி வீரர்களும் சென்றிருந்தனர். இவர்கள் ஏறிச் சென்ற விண்வெளி வாகனத்தின் பெயர் ‘அப்பலோ 11’ என்பதாகும். இந்த விண்வெளி வாகனமே அண்டவெளியில் உள்ள வேறு கிரகமொன்றில் இறங்கிய முதல் விண்வெளி வாகனமாகும்.

இந்த விண்வெளி வாகனம் 'சனி 5' என்ற ஏவுகணையையும் கொண்டு அமைந்திருந்தது. அது கட்டளைப் பணியகம், சேவைப் பணியகம், விண் வாகனம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டு இயங்கியது. பிரயாணத்தின் ஆரம்ப கட்டங்களில் விண்வெளி வீரர்கள் 'கொலம்பியா' என்றழைக்கப்படும் கட்டளைப் பணியகத்திலிருந்து இயங்கினர். பின்னர் இவர்களில் நீல் ஆம்ஸ்ட்ரோங்கும், எட்வின் அலட்ரினும் 'கழுகு' என்றழைக்கப்பட்ட விண் வாகனத்தில் ஏறிக்கொண்டு சந்திரனின் மேற்பரப்பு நோக்கிச் சென்றனர். மைக்கல் கொலின்ஸ் தொடர்ந்தும் கட்டளைப் பணியகத்திலிருந்து சந்திரனைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார்.

நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் தமது விண்வெளி வாகனத்தை இறக்கினார். வரலாற்றுப் புகழ் வாய்ந்த அந்த 'முதற்காலடியை' அவர் எடுத்து வைத்தபோது தனக்கு ஏற்பட்ட அனுபவம் மிக அற்புதமானது என்று கூறியுள்ளார். ஆம்ஸ்ட்ரோங்கைத் தொடர்ந்து எட்வின் அலட்ரினும் சந்திரனின் மேற்பரப்பில் இறங்கினார். அவர்கள் இருவரும் சில மணித்தியாலங்கள் சந்திரனின் மேற்பரப்பில் உலவினர். அவர்கள் சந்திரனின் மேற்பரப்பை புகைப்படம் எடுத்தனர். சந்திரக் கற்களையும், மண்ணையும் சேகரித்துக் கொண்டு 1969, ஜூலை 24ம் திகதி பத்திரமாக பூமியை வந்தடைந்தனர்.

அதன் பின் பல விண்வெளி வீரர்கள் சந்திரனுக்குச் சென்று விஞ்ஞான ஆய்வுகள் செய்து வந்துள்ளனர். இறுதியாக சந்திரனுக்குச் சென்ற விண்வெளி வாகனம் அப்பலோ 17 ஆகும்.

விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் ஒருமுறை இலங்கை வந்திருந்தார். இவர் தான் சந்திரனிலிருந்து கொண்டு வந்த பாறையின் ஒரு துண்டை இலங்கைக்குப் பரிசளித்தார். அது இலங்கை அரும்பொருட் காட்சியகத்தில் கண்காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

நீல் ஆம்ஸ்ட்ரோங் செய்தியொன்று பொறிக்கப்பட்ட ஞாபகார்த்தக் கல்லொன்றை சந்திரனின் தரையில் நட்டு விட்டு வந்தார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

**"பூவுலகில் இருந்து வந்த மனிதர்கள்**
**1969 ஜூலை மாதத்தில் இவ்விடத்தில்**
**தமது முதற்காலடியை எடுத்து வைத்தனர்.**
**மனித குலத்துக்கு சமாதானம் வேண்டி**
**அவர்கள் இங்கு வந்தனர்".**

—— * ——



சட்டத்தரணியாகவும் பத்திரிகையாளராகவும் கவிஞராகவும் சிறந்த ஓவியராகவும் இன்று மிளிர்ந்துள்ள சடகோபன் அவர்கள் கடந்த ஆயிரமாண்டு கால உலக வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்து தடம் பதித்த வரலாற்று நாயகர்கள் பத்துப் பேரை இந்நூலில் இளந்தலைமுறையினருக்கு அறிமுகம் செய்கின்றார். அவர்கள் அனைவருமே மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியவர்கள். அவர்களுடைய வாழ்க்கைப் பின்னணி, பின்பற்றிய கொள்கைகள், ஆற்றிய பங்களிப்பு என்பன பற்றி அனுபவம் மிக்க எழுத்தாளரான சடகோபன் எளிதில் விளங்கும் மொழிநடையில் சிறப்பாக ஒவ்வொரு கட்டுரையையும் எழுதியுள்ளார். நூலின் மற்றொரு சிறப்பு அம்சம் பொருத்தமான படங்களை நூலாசிரியரே வரைந்துள்ளமை தான்.

பல்வேறு சிறப்புகளையும் கொண்டமைந்துள்ள இந்நூல் தமிழ் பேசும் பிள்ளைகளின் ஆதரவை மட்டுமன்றி பொது வாசகர்களின் நன்மதிப்பையும் பெறும் என நம்புகிறேன். இம் முயற்சியை சடகோபன் அவர்களின் முக்கிய தமிழ்ப்பணியாகக் கருதி வாயாரப் பாராட்டுகின்றேன்.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

ISBN No : 955-8567-02-7

செல்வி அச்சகம் 207, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13. ☎ : 432477